# பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படும் பாடசாலை மட்ட ஆசிரிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் அமுலாக்கமும் அதன் நடைமுறைகளும்: ஓர் ஆய்வு

**கந்தசாமி நிதிஹரன்**
தேசிய கல்வியியற் கல்லூரி,மட்டக்களப்பு
*nithi1978@gmail.com*

**ஆய்வுச் சுருக்கம்:** பாடசாலைகளில் ஆசிரிய வாண்மைசார் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் உரிய பயன்தரவில்லை என்ற குறைபாட்டை களையும் முகமாகவும் தரமான ஆசிரியர் அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கும் என அறிமுகம் செய்யப்பட்ட திட்டமே பாடசாலை மட்ட ஆசிரிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமாகும். (School Based Teachers' Development – SBTD) இத்திட்டத்தின் மூலம் ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்குத் தேவையான விடயங்களை பாடசாலை மட்டத்திலே அதிபர் கண்டறிந்து பொருத்தமான செயற்றிட்டங்களைத் திட்டமிட்டு மேற்கொள்வதற்கு இதன் மூலம் வகை செய்யப்பட்டுள்ளது. இவ்வாய்வின் மூலம் எதிர்பார்க்கும் நோக்கங்களாக, பாடசாலை மட்ட ஆசிரிய அபிவிருத்தி செயற்றிட்டத்தில் உள்ள அம்சங்களை இனங்காணல், அதற்கான வளங்களை இனங்காணல் மற்றும் பாடசாலை மட்ட ஆசிரிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டதினை நடைமுறைப்படுத்துவதில் பாடசாலைகளின் செயற்பாடுகள் கண்டறிதல் என்பனவாகும். இவ்வாய்வின் ஆய்வுப் பிரச்சினையாக பாடசாலைகளுக்கு நேரடியாக நிதி கையளிப்புச் செய்யப்படுகின்ற போதும் அதனைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதில் பாடசாலைகள் சரியான கொள்கையின் கீழ் இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் பல்வேறு சவால்களை எதிர்நோக்குகின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கோறளைப்பற்றுப் பிரதேசம் ஆய்வுக்குரிய பிரதேசமாகும். கோறளைப்பற்றுப் பிரதேசத்தில் உள்ள 15 அரச பாடசாலைகளில் 1AB,1C,Type-II வகையைச் சேர்ந்த ஏழு பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இலக்கிய மீளாய்வுக்கு பாடசாலை மட்ட ஆசிரிய அபிவிருத்தி தொடர்பான விடயங்களை உள்ளடக்கிய கல்வி அமைச்சின் பிரதான வெளியீடு பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், ஆசிரியர் கல்வி மற்றும் அபிவிருத்தி தொடர்பான கல்வி அமைச்சின் சுற்று நிருபங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.இவ்வாய்வு ஒரு கள ஆய்வாக அமைந்துள்ளது. அளவுசார் ஆய்வு முறையியல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்விலே வினாக்கொத்து மூலம் பெறப்படும் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்படுகின்றது. ஆய்வு முடிவுகளின் படி கோறளைப்பற்றுப் பிரதேசப் பாடசாலைகளில் பாடசாலை மட்ட ஆசிரிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் 53ூஆசிரியர்களின் கருத்துபடி அதற்கான வளங்கள் போதுமானதாகக் கிடைப்பதில்லை. அத்தோடு இதனை நடைமுறைப்படுத்துவற்கு உரிய செயற்பாடுகள் பாடசாலைகளில் 66ூஆசிரியர்களின் கருத்துப்படி பொருத்தமானதாக அமைந்திருக்கவில்லை. ஆசிரியர்களின் உண்மையான தேவைப்பாடுகள் இனங்காணப்படுதல், ஆசிரியர்கள் பங்குபற்றுதலுக்கான வாய்ப்பு, கல்விக் கோட்டங்கள் மற்றும் வலயங்களின் கண்காணிப்பு போன்றவை மிகவும் மோசமான நிலையில் இருப்பதை இவ்வாய்வு மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. பெரும்பான்மையான ஆசிரியர்களின் கருத்துப்படி இந்நிகழ்ச்சித் திட்டத்தினை அமுல்படுத்துவதற்கான பாடசாலை மட்டத்திலான செயற்பாடுகள் வீழ்ச்சியான நிலையில் இருப்பதையே காட்டி நிற்கின்றது.

**திறவுச் சொற்கள்** : பாடசாலை, அபிவிருத்தி, ஆசிரியர், கல்வி, திட்டமிடல்

## 1. ஆய்வு அறிமுகம்

பாடசாலைகளில் பௌதீக விருத்தி மட்டுமன்றி மனிதவள அபிவிருத்தியும் முக்கியமானதாகும். இதன்படி பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களின் வாண்மை விருத்தி கருதி ஆசிரிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களையும் முன்னெடுக்கும் போது மட்டுமே மாணவர்களுக்குத் தரமான கல்வியை வழங்க முடியும். தரமான ஆசிரியர்கள் மூலமே தரமான கல்வியை ஏற்படுத்த முடியும். அதன் மூலமே சமூகத்தின் தரம் மேம்பாடடையும். இலங்கையில் பல்வேறு ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களால் உரிய பயன்தரவில்லை என்ற கருத்து ஆய்வு மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இக்குறைபாட்டை களையும் முகமாகவும் தரமான ஆசிரியர் கல்வி அபிவிருத்தியை ஏற்படுத்தும் நோக்குடன் அறிமுகம் செய்யப்பட்ட திட்டமே பாடசாலை மட்ட ஆசிரிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமாகும். இத்திட்டத்தின் மூலம் ஆசிரியர்களுக்கான அபிவிருத்தித் திட்டமிடலை அதிபர் மேற்கொண்டு பொருத்தமான செயற்றிட்டங்களை மேற்கொள்வதற்கு வழி வகை செய்யப்பட்டுள்ளது.

## 2. ஆய்வுப் பிரச்சினை

பாடசாலை மட்ட ஆசிரிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் மத்திய கல்வி அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள போதும் அதற்கான செயற்பாடுகள் முறைப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்துதில் பல பிரச்சினைகள் எதிர்நோக்கப்படுகின்றன.

- பாடசாலை மட்டத்திலே இந்நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான பொருத்தமான வளங்களை பெற்றுக் கொள்ளல் சிரமமானதாக அமைந்துள்ளது.
- பாடசாலைகளில் இந்நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் அதிபர்களிடையே காணப்படுகின்ற குறைபாடுகளும் உரிய கண்காணிப்புக்களும் இன்மை.
- ஆசிரியர்களின் வாண்மை விருத்தியில் இந்நிகழ்ச்சித் திட்டம் பெறுமதியுடையதாக அமைந்துள்ளதா? போன்ற சிக்கல்கள் நடைமுறையில் இருந்து வருகுின்றன. இவற்றினை ஆய்வின் மூலம் கண்டறிவதாக இவ்வாய்வு அமைந்துள்ளது.

**3. ஆய்வு நோக்கங்கள்**

- பாடசாலை மட்ட ஆசிரிய அபிவிருத்தியின் நடைமுறையில் உள்ள அம்சங்களை இனங்காணல்
- இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கான வளங்களை இனங்காணல்
- பாடசாலை மட்ட ஆசிரிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டதினை நடைமுறைப்படுத்துவதில் பாடசாலைகளின் செயற்பாடுகள் இனங்காணல்

4. **ஆய்வுப் பிரதேச அறிமுகம்:** மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கோறளைப்பற்றுப் பிரதேசம் ஆய்வுக்குரிய பகுதியாகும். இப்பிரதேசம் வடக்கே நாசிவன்தீவுக் கிராமத்தையும், கிழக்கே வங்கக் கடலையும், தெற்கே கும்புறுமூலையினையும், மேற்கே கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவையும் எல்லையாகக் கொண்டது. வலய மட்டத்தில் ஆய்வினை மேற்கொள்ளும் போது மாதிரி எடுத்தல் மற்றும் ஆய்வுக்கான காலம் போதாமை காரணமாகவே கல்குடா கல்வி வலயத்தினுள் இடம்பெறும் ஒரு பிரதேச செயலாளர் பிரிவு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

5. **ஆய்வின் வரையறை :** ஆய்வின் நோக்கம் கருதி கோறளைப்பற்றுப் பிரதேசத்தில் உள்ள 15 அரச பாடசாலைகளில் 1AB,1C,Type-IIவகையைச் சேர்ந்த ஏழு பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படும் பாடசாலை மட்ட ஆசிரிய அபிவிருத்தி நிகழச்சித் திட்டத்தின் செயற்பாடுகள் ஆய்வுக்குரிய பகுதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இப்பாடசாலைகளிலே தான் இந்நிகழ்ச்சித் திட்டம் விரிவான முறையில் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

**6. இலக்கிய மீளாய்வு**

**பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்திவேலைத்திட்டம்**

மாணவர்களின் அடைவு மட்ட உயர்வு மற்றும் ஆளுமை விருத்திக்கு வழிவகுக்கக் கூடிய பொறுப்பு மிக்க ஆசிரியர்களை உருவாக்குவதற்காக பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி தேவைகளை இனங்காணல், திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தல் என்னும் செயற்பாடுகளை உள்ளடக்கியதுமான தொடர்ச்சியானதும் ஒருங்கிணைந்ததுமான ஆசிரியர் விருத்திச் செயற்பாடுகளைப் பாடசாலைகளில் செயற்படுத்தலானது பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டம் எனப்படும்.

**நோக்கங்கள்**

- ❖ ஆசிரியர் விருத்தி வேலைத்திட்டத்தைத் தாமாகவே திட்டமிட்டு நடைமுறைப்படுத்தும் ஆற்றல் உள்ளதாக வலுப்படுத்தல்.
- ❖ மாணவர்களின் அடைவு மட்ட மேம்பாட்டுக்கான தொடருறு ஆசிரியர் கல்வி வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படல்.
- ❖ ஆசிரியர்களிடையே சிறந்த நடைமுறைகள் தொடர்பான அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளல் மற்றும் பிரதிபலித்துக் கற்கும் தேர்ச்சியை மேம்படுத்தல்.
- ❖ தொடருறு ஆசிரியர் கல்வி வேலைத்திட்டம் மூலமாகப் பாடசாலை முறைமையில் பண்புத்தர விருத்தியை ஏற்படுத்தல்.

**பாடசாலை மட்ட ஆசிரியர் விருத்தி வேலைத்திட்டத்தின் தேவைகள்**

தற்போது நடைமுறையில் உள்ள ஆசிரியர் கல்வி வேலைத் திட்டங்கள் பெரும்பாலும் பாடசாலைகளுக்கான குறிப்பான தேவைகளுக்குப் பொருத்தமாக அமைவதில்லை. அத்துடன் பிறரால் திட்டமிடப்பட்ட பாரம்பரியமான ஆசிரியர் கல்விச் செயற்பாடுகளை விட பாடசாலைகளால் இனங்காணப்பட்ட தமது தேவைகளுக்குப் பொருத்தமான வேலைத் திட்டங்கள் பாடசாலைகளாலேயே நடைமுறைப்படுத்தப்படுவதன் மூலம் உயர் அடைவுகள் எட்டப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. தமது வேலைத்திட்டம் என்ற உணர்வானது ஆசிரியர்களின் ஆக்கபூர்வமான பங்களிப்புக் கிடைக்க வாய்ப்பாய் அமையும். மேலும்,பாடசாலைகளின் பௌதீக மற்றும் ஏனைய வசதி வாய்ப்புக்களுக்கு

அமைவாய் நடைமுறைப்படுத்தப்படும். இவ் வேலைத்திட்டங்களின் விளைவுகளை நேரடியாக கண்டு கொள்ள முடியும். நேரமும் வளங்களும் சிறந்த முறையில் பயன்படுத்தப்படும். ஆசிரியர்கள் தமக்கிடையே வாண்மை விருத்தி தொடர்பான கருத்து பரிமாறல்கள் செய்யவும் இடைத்தொடர்புகளை வளர்த்துக் கொள்ளவும் முடியும்.பாடசாலைகள் சுய விருத்திக்கான ஆற்றலைப் பெற பயிற்சியும் சந்தர்ப்பமும் கிடைக்கும்.

**பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டத்தினை நிறுவனப்படுத்தல்**

பாடசாலைகளில் பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி வேலைத் திட்டத்தினை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த பின்வரும் செயற்பாடுகளை அனுசரித்தல் பொருத்தமானது.பாடசாலையின் செயற்பாடுகளைச் சிறந்த முறையில் மீளாய்வு செய்து ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டங்களை அமைத்தல் வேண்டும். அத்துடன்,ஆசிரியர் மேம்பாட்டுக்காக ஒவ்வொரு பாடசாலையிலும் ஒரு குழுவை அமைத்தல் மற்றுமொரு அம்சமாகும். அது மட்டுமன்றி இக்குழு பாடசாலையின் ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டத்தினை இனங்கண்டு தயாரிக்கும் பொறுப்பினையும் கொண்டது. அவ்வாறு இனங்காணப்பட்ட தேவைகளை முன்னுரிமை அடிப்படையில் வருடாந்த பாடசாலைச் செயற்றிட்டத்தில் இணைத்துக் கொள்ளல் பிரதான விடயமாகும்.

சகல பாடசாலைகளும் தமது வரவு செலவுத் திட்டத்தின் பாடசாலை மட்ட ஆசிரியர் மேம்பாட்டிற்குப் போதிய நிதியினை ஒதுக்குதல். அத்துடன் பொருத்தமானதும் சாத்தியமானதுமான வேறு நிதி மூலங்களை உரியவாறு பெற்றுக் கொள்ளலும் முக்கிய பணியாகும். இச்செயற்பாடுகளில் ஆர்வத்துடன் பங்குபற்ற ஆசிரியர்களை ஊக்குவப்பது இந்நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கியமான பணியாகும். வேலைத் திட்டங்களைத் தயாரிக்கும் போது செலவற்ற வேலைத் திட்டங்களையும் சேர்த்துக் கொள்ளல் வேண்டும். இவ்வாறு தமக்காக தாமே செயற்படுத்தும் இவ்வேலைத் திட்டங்களைச் சிறந்த முறையில் மேற்பார்வை செய்து மேம்படுத்தல் வேண்டும். பெறப்பட்ட அனுபவங்களைப் பாடசாலையின் உள்ளும், பாடசாலைக்கு வெளியே ஆசிரியர்களுடனும் (கோட்ட,வலய,மாகாண மட்டத்தில்) பகிர்ந்து பரஸ்பரம் விருத்தியடைதல் அவசியமானதாகும்.

**பாடசாலை மட்ட ஆசிரியர் மேம்பாட்டிற்குப் பொருத்தமானசெயற்பாடுகள்**

பாடசாலைகள் தமது தேவைகளுக்காக வடிவமைக்கும் செயற்பாடுகள் பொருத்தமாக இருப்பதை உத்தரவாதப்படுத்திக் கொள்ள வேண்டும். ஆசிரியர்கள் கூட்டம்/ பெற்றோர்கள் கூட்டம்,தொடர்ந்து நடைபெறும் குழுக்கூட்டங்கள்,மாதிரிக் கற்பித்தல்,ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டங்களை வெளிப்புற உதவியுடன் செயற்படுத்தல்,சகபாடிகள் பயிற்சி,தொழில் வழிகாட்டுநர் மூலம் வழிகாட்டல்,செய்து காட்டல்,பாடசாலை மட்ட திட்டமிடல்,வேலைத்திட்டங்கள் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடல்,ஆசிரியர்களுக்கான தனிப்பட்ட வழிகாட்டல்கள் ஏற்பாடு செய்தல்,செயல் நிலை ஆய்வு,சம்பவக் கற்கை,கண்காணிப்புப் பயணம்,அனுபவப் பரிமாற்றத்திற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தல். இவற்றின் மூலமான அபிவிருத்தி ஆசிரியர்களின் வாண்மைத்துவ விருத்தியை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகினது.

## 7. ஆய்வு முறையியல்

பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படும் பாடசாலை மட்ட ஆசிரிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கமும் அதன் நடைமுறைகளும் - ஓர் ஆய்வு என்னும் தலைப்பிலான இவ்வாய்வு ஒரு கள ஆய்வாக அமைந்துள்ளது. அளவுசார் ஆய்வு முறையியல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் அண்மைக்கால செயற்பாட்டு அம்சங்களில் ஒன்று ஆசிரிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமாகும். இவை பாடசாலைகளின் பாடவிதான செயற்பாடுகளை மேம்படுத்தவும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் கல்வித்தர விருத்தியை மேம்பாடடையச் செய்யவும் பங்களிப்புச் செய்கின்றது. பாடசாலைகளில் அங்கீகரிக்கப்பட்ட கலைத்திட்டத்திற்கு மேலதிகமாக மாணவர்களின் ஆற்றுகை விருத்தியை முன்னெடுப்பதில் இவை பெரும் பங்கு வகிக்கின்றன. ஆசிரியர்களின் வாண்மை உயர்வே மாணவர்களில் கற்றலை மேம்படுத்தும்.

இன்று பாடசாலைகளில் பாடசாலை மட்ட ஆசிரிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் எவ்வளவு தூரம் பயனுள்ளதாக அமைகின்றதோ அந்தளவிற்கு மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளும் பயனுடையதாக அமையும். நடைமுறைசார் அடிப்படையில் இது ஒரு பிரச்சினையாவே தொடர்கின்றன.

மாதிரி எடுத்தல் செயற்பாட்டின் பிரகாரம் இவ்வாய்வானது கோறளைப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதி ஆய்வுப் பிரதேசமாக அமைந்துள்ளது. இப்பிரதேசத்தில் 15 அரச பாடசாலைகள்

அமைந்துள்ளன. இவற்றில் 1AB,1C,Type - IIபாடசாலைகள் மாத்திரமே ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் இரண்டு 1AB பாடசாலைகளும் ஒரு 1C பாடசாலையும் நான்குType - 2 பாடசாலைகளும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

ஆய்வுக்குட்படுத்தப்படும் ஒவ்வொரு பாடசாலையிலும் ஆசிரியர்கள் மூலமாக தரவு சேகரிக்கப்படும் பொழுது பின்வரும் வகையில் மாதிரி எடுக்கப்படுகின்றது. குறிப்பிட்ட பாடசாலையில் பணியாற்றும் ஆசிரியர்களில் 1/5 என்ற அடிப்படையில் மாதிரி எடுக்கப்பட்டது. 07 பாடசாலைகளிலும் கற்பிக்கும் 223 ஆசிரியர்களில் 44 ஆசிரியர்கள் ஆய்வுக்குத் தெரிவு செய்யப்பட்டனர். இதில் அதிபர்கள் மற்றும் கல்வி அதிகாரிகள் சேர்த்துக் கொள்ளபடவில்லை. ஒரு மட்டுப்படுத்தப்பட்ட ஆய்வாகவும் ஆசிரியர்கள் மத்தியில் எத்தகைய கருத்து நிலவுகின்றன என்பது பற்றி அறியத்தக்க வகையிலே இவ்வாய்வு அமைந்துள்ளது. இது ஒரு ஆசிரியர்களுக்கான நிகழ்ச்சித்திட்டமாக அமைந்திருப்பதால் ஆசிரியர்களை மட்டும் வைத்து இந்த ஆய்வ மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தரவு சேகரிப்பதற்காக இவ்வாய்விலே வினாக்கொத்து பயன்படுத்தப்பட்டுள்ளது.தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் ஆசிரியர்கள் மூலம் பெறப்பட்ட தகவல்கள் ஆய்வுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.இதில் இரு தலைப்புக்களில் 10 வினாக்கள் வினாவப்பட்டுள்ளன. இத்தரவுப் பகுப்பாய்விலே அளவுசார் அணுகுமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது.அளவுசார் அணுகுமுறையிலே சதவீதம் கணித்தல், தரவுகளை அட்டவணைப்படுத்தல், போன்ற விடயங்கள் முக்கியம் பெறுகின்றன. பிரதான பகுப்பாய்வு நுட்பங்களாக தரவுகளை அட்டவணைப்படுத்தல், நூற்றுவீதம் கணித்தல் என்பன இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளன.


**8. ஆய்வுப் பகுப்பாய்வு**

இந்நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் தெரிவு செய்யப்பட்ட 44 ஆசிரியரிகள் மத்தியில் இரு தலைப்புக்களின் கீழ் 10 வினாக்கள் வினாவப்பட்டன. அதன்படி அதனை பின்வரும் அட்டவணையில் பகுப்பாய்வு செய்து முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதில் இந்நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான வளங்கள் எவ்வளவு தூரம் காணப்படுகின்றன என்பதைக் கண்டறிவதாக உள்ளது. குறிப்பாக வளவாளர்களைப் பெற்றுக்கொள்வதில் அதிகம் பற்றாக்குறை நிலவுவதைக் காணலாம். 22% ஆசிரியர்களின் கருத்துப்படி வளவாளர்கள் பற்றாக்குறை உள்ளதைக் காட்டுகின்றனர்.

| **1.0** | **பாடசாலை மட்ட ஆசிரிய அபிவிருத்திக்கான வளங்கள்** | | | |
|---|---|---|---|---|
| | | | **ஆம்** | **இல்லை** |
| | 1.1 | போதுமான நிதி வளங்கள் கிடைக்கின்றதா? | **45%** | **55%** |
| | **1.2** | பாடசாலையினுள் ஆசிரிய அபிவிருத்தித் திட்டத்தினை செய்யக் கூடிய வளவாளர்கள் உள்ளனரா? | **22%** | **78%** |
| | **1.3** | வெளி ஆளணியினரை பயன்படுத்தக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளனவா? | **45%** | **55%** |
| | **1.4** | இதனை நடைமுறைப்படுத்துவதற்கான பௌதீக வளங்கள் உள்ளனவா? | **86%** | **14%** |
| | **1.5** | அறிய வேண்டிய புதிய தகவல் வளங்கள் முன்வைக்கப்படுகின்றனவா? | **36%** | **64%** |
| சராசரி வீதம் | | | **47%** | **53%** |

பாடசாலை மட்ட ஆசிரிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதில் வளங்கள் மிக முக்கியமானவை. ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பாடசாலைகளின் உள்ள தன்மையை இவ்வட்டவணை ஊடாகப் பார்க்க முடியும்.

*அட்டவணை – 01* ***பாடசாலை மட்ட ஆசிரிய அபிவிருத்திக்கான வளங்கள்***




பாடசாலை மட்டத்திலே வினைத்திறனான செயற்பாட்டுக் கட்டமைப்புக் காணப்படும் பட்சத்திலே தான் இதன் நோக்கம் வெற்றிகரமானதாக நிறைவேறும். இந்தப் பகுப்பாய்வின் படி பார்க்கும் போது பாடசாலை மட்டத்திலே இதனை நடைமுறைப்படுத்துவற்கான குழு 34% கருத்துப்படி உள்ளது எனவும் 66% கருத்துப்படி அத்தகைய தன்மை இல்லை என்பதைக் காட்டியுள்ளனர். ஆசிரியர் பங்குபற்றலுக்கான வாய்ப்பு 78% வீதத்தினரின் கருத்துப்படி வழங்கப்படுவதில்லை என்பதை வெளிப்படுத்தியுள்ளனர்.


பாடசாலைகளில் இந்நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளைப் பார்கின்ற போது பின்வரும் முடிவுகளைப் பெறத்தக்கதாக அமைந்துள்ளது.

| **2.0** | **பாடசாலை மட்ட ஆசிரிய அபிவிருத்தி தொடர்பில் பாடசாலைகளின் செயல்முறைகள்** | | | |
|---|---|---|---|---|
| | **2.1** | பாடசாலை மட்ட ஆசிரிய அபிவிருத்திக் குழு இயங்குகின்றதா? | **34%** | **66%** |
| | **2.2** | வருடாந்த அமுலாக்கத்திட்டத்தில் SBTDஉள்வாங்கப்பட்டுள்ளதா? | **86%** | **14%** |

| | | | | |
|---|---|---|---|---|
| | **2.3** | ஆசிரியர்களின் உண்மையான தேவைகள் இனங்காணப்பட்டு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றனவா? | **09%** | **81%** |
| | **2.4** | ஆசிரியர்கள் பங்குபற்றலுக்கான வாய்ப்புக் கள் வழங்கப்படுகின்றன? | **22%** | **78%** |
| | **2.5** | SBTD மேற்பார்வையில் கோட்டம் வலய மட்ட கண்காணிப்பு திருப்திகரமாக உள்ளதா? | **18%** | **82%** |
| | | சராசரி வீதம் | **34%** | **66%** |

இந்நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் எத்தகைய செயன் முறைகள் பாடசாலைகளில் நடைமுறை முறைப்படுத்தப்படுகின்றன என்பதை இவ்வட்டவணை மூலம் காணலாம்.

***அட்டவணை-02 பாடசாலை மட்ட ஆசிரிய அபிவிருத்தி தொடர்பில் பாடசாலைகளின் செயல்முறைகள்***




## ஆய்வு முடிவுகள்

பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படும் பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் அமுலாக்கம் அதன் நடைமுறைத்தன்மைகளை இவ்வாய்வினை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது பின்வரும் முடிவுகளைப் பெறக்கூடியதாக இருந்தது.

1.பாடசாலை மட்ட ஆசிரிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான வளங்கள் தொடர்பில் 53% போதுமானதாக அமைந்திருக்கவில்லை என்பதையே இவ்வாய்வு மூலம் அறிய முடிகின்றது. பௌதீக வளங்களைப் பொறுத்தவரை 86% சாதகமாக அமைந்திருந்தாலும் ஏனைய விடயங்களை நோக்கும் போது சராசரியை விட அதிகமானோர் இல்லை என்றே பதில் அளித்துள்ளனர். இது இந்நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான சாதகமான சூழலாக இனங்காண முடியாதுள்ளது.

2.பாடசாலை மட்ட ஆசிரிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினைப் பாடசாலையில் நடைமுறைப்படுத்தும் செயல் முறைகளும் வெற்றியளிப்பதாக அமைந்திருக்கவில்லை. 66% ஆன ஆசிரியர்கள் பொருத்தமானதாக அமைந்திருக்கவில்லை என்பதையே

வெளிப்படுத்தியுள்ளனர்.ஆசிரியர்களின் உண்மையான தேவைப்பாடுகள் இனங்காணப்படுதல் ஆசிரியர்கள் பங்குபற்றுதலுக்கான வாய்ப்பு, கல்விக் கோட்டங்கள் மற்றும் வலயங்களின் கண்காணிப்பு போன்றவை மிகவும் மோசமான நிலையில் இருப்பதை இவ்வாய்வு மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. பெரும்பான்மையான ஆசிரியர்களின் கருத்துப்படி இந்நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்படுத்துவதற்கான பாடசாலை மட்டத்திலான செயற்பாடுகள் வீழ்ச்சியான நிலையில் இருப்பதையே காட்டி நிற்கின்றது.

9. **பரிந்துரைகள்**

- பாடசாலை மட்டத்திலே இந்த நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதானால் குறிப்பாக பொருத்தமான வளங்கள் போதுமானளவு கிடைத்தல் வேண்டும். குறிப்பாக ஆசிரியர்களின் தேவைகளுக்கு ஏற்ப மனித வளங்களைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருத்தல் அவசியம். அவ்வாறு இல்லாத பட்சத்தில் செயற்பாடுகள் பொருத்தமற்றதாகவே காணப்படும்.
- கோட்டமட்ட அதிகாரிகள் மற்றும் வலய மட்ட அதிகாரிகளின் ஒத்துழைப்பும் மேற்பார்வையும் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
- ஆசிரியர்களின் உண்மையான வாண்மை விருத்திக்கான தேவைப்பாடுகளை தேவைப் பகுப்பாய்வு செய்து கண்டுபிடித்து பின்னர் அதற்கான செயற்றிட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

**உசாத்துணை நூல்கள்**


- சின்னத்தம்பி மா,(2004) ஆசிரிய முகாமைத்துவம், விஸ்டம் பப்ளிகேசன், கொக்குவில்.
- ரஞ்சித் குமாரசிறி,(2009)அதிவிசேட ஆசிரியராகுங்கள்,இலங்கை தேசிய நூலகம்,கொழும்பு
- கல்வி அமைச்சு (2013), பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி வழிகாட்டல் கைந்நூல்
- கல்வி அமைச்சுச் சுற்றுநிருபம், 2013/07